காவல் துறை குறைகேட்பு முகாமில் 35 மனுக்களுக்குத் தீர்வு

தருமபுரி, நவ. 11: தருமபுரியில் காவல் துறை சார்பில் நடைபெற்ற வாராந்திர மக்கள் குறை கேட்பு முகாமில், பொதுமக்கள் அளித்த 46 மனுக்களில் 35 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டது.

தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்ற இந்த முகாமுக்கு மாவட்ட காவல் கண்காணிப் பாளர் ஆ.கு.அருண் கபிலன் தலைமை வகித்து, பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றார்.

மாவட்டத்தின் பல்வேறு காவல் நிலைய எல்லைகளுக்கு உள்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் விசாரணைக்காக 46 மனுக்களை அளித்தனர்.

இந்த மனுக்கள் மீது காவல் ஆய்வாளர்கள், உதவி காவல் ஆய்வாளர்கள் ஆகியோர் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களிடம் விசாரணை மேற்கொண்டனர். இதில், 35 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டது. மீதமுள்ள மனுக்கள் மீது தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. முகாமில் காவல் துறையினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் சர்ச்சைக்குரிய பதிப்பகங்களின் 2,845 புத்தகங்கள்

அரசின் அடுத்தகட்ட நடவடிக்கைக்காக காத்திருப்பு

தருமபுரி/ கிருஷ்ணகிரி, நவ. 11: போலி நூல்கள் கொள்முதல் செய்யப்பட்டதாக எழுந்துள்ள புகாரைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்ட மைய நூலகத்துக்கு வந்துள்ள 1,120 சர்ச்சைக்குரிய பதிப்பகங்களின் புத்தகங்கள் பிற நூலகங்களுக்கு அனுப்பப்படாமல் வைக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க அரசின் உத்தரவுக்கு காத்திருப்பதாக நூலகத் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

கோவை காந்திபுரத்தில் உள்ள பெரியார் அறிவுலகம் நூலகத்தில் அகல்விளக்கு மற்றும் பீனிக்ஸ் பதிப்பகங்களின் பெயர்களில் போலி நூல்களை அதிக விலைக்கு வாங்கியதாக புகார்கள் எழுந்தன. இதையடுத்து, புகாருக்கு உள்ளான பதிப்பகங்களின் புத்தகங்கள் பெரியார் அறிவுலகம் நூலகம், மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் உள்ளிட்ட சில நூலகங்களில் இருந்து அதிகாரிகளால் அகற்றப்பட்டன.

இந்த புத்தகக் கொள்முதல் முறைகேடுகள் குறித்து அரசு விசாரணை நடத்தி வருகிறது. மேலும், ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸாரும் நூலகங்களில்விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 103 நூலகங்களுக்கு விநியோகிப்பதற்காக, கிருஷ்ணகிரி மாவட்ட மைய நூலகத்துக்கு அகல்விளக்கு பதிப்பகத்தில் இருந்து 797 புத்தகங்கள், பீனிக்ஸ் பதிப்பகத்தில் இருந்து 323 புத்தகங்கள் என மொத்தம் 1,120 புத்தகங்கள் வந்துள்ளன.

இப்புத்தகங்கள் தொடர்பாக சர்ச்சை எழுந்துள்ளதால், அவற்றை பிரித்து நூலகங்களுக்கு அனுப்பாமல் அலுவலர்கள் வைத்துள்ளனர். அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து அரசின் உத்தரவுக்காக காத்திருப்பதாக நூலகத் துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

தருமபுரி மாவட்டத்தில் 1,725 புத்தகங்கள்

தருமபுரி மாவட்டத்தில் 133 நூலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய பதிப்பகங்களின் 1,725 புத்தகங்கள் தொடர்பாக அரசின் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு காத்திருக்கின்றன.

தருமபுரி மாவட்டத்தில் 133 நூலகங்கள் உள்ளன. இந்த நூலகங்களுக்கு சர்ச்சைக்குள்ளான அகல்விளக்கு, பீனிக்ஸ் பதிப்பகங்களின் மொத்தம் 1,725 புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த புத்தகங்களைக் கையாளுவது குறித்து அரசின் உத்தரவுக்காக அலுவலர்கள் காத்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அரூர் அருகே ரூ. 20.70 லட்சத்தில் நூலகம் திறப்பு

அரூர், நவ.11: அரூரை அடுத்த அண்ணா நகரில் ரூ. 20.70 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நூலகம் புதன்கிழமை திறக்கப்பட்டது.

அரூர் வட்டம், வீரப்பநாய்க்கன்பட்டி ஊராட்சிக்கு உள்பட்ட அண்ணா நகரில் 100-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதி மாணவர்கள், இளைஞர்களின் பயன்பாட்டுக்காக நூலகம் அமைக்க வேண்டும் எனப் பொதுமக்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதையடுத்து, தனியார் பங்களிப்புடன் ரூ. 20.70 லட்சம் மதிப்பீட்டில் அம்பேத்கர் பெயரில் நூலகம் கட்டும் பணி தொடங்கப்பட்டது.

தற்போது கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, நூலகத் திறப்பு விழா நடைபெற்றது.

அரூர் வருவாய் கோட்டாட்சியர் ஹரிபிரியங்கா சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று நூலகத்தைத் திறந்துவைத்தார்.

நவ. 14 இல் விரைவு மிதிவண்டிப் போட்டி: பள்ளி மாணவர்கள் பங்கேற்கலாம்

தருமபுரி, நவ. 11: தருமபுரியில் வரும் 14-ஆம் தேதி நடைபெறும் அண்ணா பிறந்த நாள் விரைவு மிதிவண்டிப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்க மாவட்ட ஆட்சியர் வே. சரவணன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக அரசின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், முன்னாள் முதல்வர் அண்ணாவின் பிறந்த நாளான செப். 15-ஆம் தேதியைச் சிறப்பிக்கும் வகையில், ஆண்டு தோறும் விரைவு மிதிவண்டிப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

அதன்படி, தருமபுரி மாவட்ட அளவிலான போட்டிகள் நவ. 14-ஆம் தேதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெற உள்ளன. இதில் 13, 15, 17 வயதுகளுக்கு உள்பட்ட மாணவ, மாணவிகளுக்கு தனித்தனியாகப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

13 வயதுக்கு உள்பட்ட மாணவர்கள் பிரிவில் பங்கேற்போர், மாவட்ட விளையாட்டரங்கில் தொடங்கி 4 சாலை, அரசு மருத்துவமனை, இலக்கியம்பட்டி வழியாகப் பழைய ஆட்சியர் அலுவலகம் வரை சென்று மீண்டும் விளையாட்டரங்குக்குத் திரும்ப வேண்டும். இதே வயதுப் பிரிவைச் சேர்ந்த மாணவியர் 4 சாலை, அரசு மருத்துவமனை வழியாகப் பாரதிபுரம் வரை சென்று திரும்ப வேண்டும்.

15, 17 வயதுகளுக்கு உள்பட்ட மாணவர்கள் மாவட்ட விளையாட்டரங்கில் தொடங்கி 4 சாலை, அரசு மருத்துவமனை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வழியாக ஓட்டப்பட்டி வரை சென்று திரும்ப வேண்டும். இதே வயதுப் பிரிவைச் சேர்ந்த மாணவியர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை சென்று திரும்ப வேண்டும்.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு முறையே ரூ.5,000, ரூ.3,000, ரூ.2,000 பரிசுத் தொகையும், 4 முதல் 10-ஆம் இடங்களைப் பெறுவோருக்குத் தலா ரூ.250 பரிசுத் தொகையும் வழங்கப்படும். பரிசுகள் காசோலை அல்லது வங்கி மாற்று வழியில் வழங்கப் படுவதுடன், வெற்றி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப் படும்.

போட்டியில் பங்கேற்க சாதாரண ஹேண்டில் பார் கொண்ட, இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப் பாகங்கள் பொருத்தப்படாத, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மிதிவண்டிகள் மட்டுமே அனுமதிக்கப்படும் என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பிரம்ம கமலம் மலர்ந்தது...



தருமபுரி வெண்ணாம்பட்டி சாலை குள்ளனூரைச் சேர்ந்த சிவா என்பவரின் வீட்டில் மலர்ந்துள்ள ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே இரவில் மலரும் அரியவகை பூவான பிரம்ம கமலம்.

ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 3000 கனஅடி

பென்னாகரம், நவ. 11: ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து புதன்கிழமை 3,000 கனஅடியாக நீடிக்கிறது.

இரு மாநில காவிரி கரையோர வனப் பகுதிகளில் மழைப்பொழிவு குறைந்ததாலும், கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் திறக்கப்படும் தண்ணீர் முற்றிலும் நிறுத்தப்பட்டதாலும் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

இந்த நிலையில், புதன்கிழமை நிலவரப்படி நீர்வரத்து விநாடிக்கு 3,000 கனஅடியாக உள்ளது. ஒகேனக்கல் அருவிகளில் விழும் நீரின் அளவு தொடர்ந்து சீராக உள்ளது. காவிரி ஆற்றின் நீர்வரத்தை தமிழக, கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத் துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

பாப்பாரப்பட்டியில் ஓட்டுநர் தற்கொலை: போலீஸார் விசாரணை

பென்னாகரம், நவ.11: பாப்பாரப்பட்டி அருகே ஓட்டுநர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டது குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி அருகே பிக்கிலி ஊராட்சிக்கு உள்பட்ட பெரியூரைச் சேர்ந்தவர் பாலு மகன் அண்ணாமலை (42). ஓட்டுநரான இவருக்கு தேன்மொழி என்ற மனைவியும், பிரசாந்த் (17) என்ற மகனும், ரித்திகா (13) என்ற மகளும் உள்ளனர்.

புதன்கிழமை மது போதையில் வீட்டுக்கு வந்த அண்ணாமலை, மனைவியிடம் சீட்டுக் கட்டுவதற்குப் பணம் கேட்டுள்ளார். அவர் பணம் தர மறுத்ததால் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் மனமுடைந்த அண்ணாமலை வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இதுகுறித்து தகவலறிந்த பாப்பாரப்பட்டி போலீஸார் சம்பவ இடத்துக்குச் சென்று உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



அரூர்

அரூர் துணை மின் நிலையத்தில் நடைபெறும் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் காரணமாக, அரூர் வட்டாரப் பகுதிகளில் வியாழக்கிழமை (நவ. 12) காலை 9 முதல் பிற்பகல் 2 மணி வரை மின் தடை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் தடை செய்யப்படும் பகுதிகள்:

அரூர் நகர், மோப்பிரிப்பட்டி, அக்ராஹரம், பெத்தூர், சந்தப்பட்டி, அச்சல்வாடி, பேதாதம்பட்டி, சின்னாங்குப்பம், கோபிநாதம்பட்டி கூட்டுசாலை, எல்லப்புடையாம்பட்டி மற்றும் அதன் சுற்று வட்டார கிராமங்கள்.

RELIGARE ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட்
(RELIGARE FINVEST LTD.)
CIN:U74999DL1995PLC064132

அசையும் சொத்துக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு

அசையும் சொத்துகளை விற்பனை செய்வதற்கான மின்னணு ஏல அறிவிப்பு, பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் ஆகியோருக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள சொத்துகள் ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் (சுருக்கமாக 'RFL'), நிறுவனத்தின் வசம் உள்ளன. பலமுறை அறிவிப்புகள் அனுப்பப்பட்டும், கடன் கடன்தாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் தரப்பிலிருந்து இந்த அசையும் சொத்துகளை எடுத்துச் செல்வது தொடர்பாக எந்தவிதமான பதிலோ அல்லது நடவடிக்கையோ இல்லாத காரணத்தினால், இந்த மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு வெளியிடப்படுகிறது. இந்த மின்-ஏலமானது **https://www.bankeauctions.com/** என்ற இணையதளத்தின் வாயிலாக, "ஆன்லைன் மின்னணு ஏல" முறையில் மட்டுமே நடத்தப்படும். இது 18.12.2026 அன்று காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறும். மேலும், ஏல நேரம் தலா 5 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகளுடன், வரம்பின்றி நீட்டிக்கப்பட வாய்ப்புள்ளது. அசையும் சொத்துக்கள் அனைத்தும், **1) M/s ஸ்ரீ கிரிஸ்டியன் சேரிட்டபிள் டிரஸ்ட் [கிங் காலேஜ் இன்ஸ்டிடியூஷன்ஸின் அறங்காவலர்] (கடன்தாரர்), 2) Mr.J.இளங்கோ மற்றும் 3) Mrs.கமரினா (சக-கடன்தாரர்கள்)** ஆகியோருக்குத் தொடர்புடையவை. இவை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

அசையும் சொத்துக்கள் விவரம்

1) பல்வேறு வகையான நீண்ட இருக்கைகள் - 1084, 2) பல்வேறு வகையான மேசைகள் - 369, 3) பல்வேறு வகையான நாற்காலிகள் - 724, 4) சின்டெக்ஸ் தண்ணீர் தொட்டி-5, 5)மோட்டார் -42, 6) படுக்கைகள் - 555, 7) ஆய்வக உபகரணங்கள் - 8 தொகுப்புகள், 8)கணினி மையச் செயலாக்க அலகு -53, 9) பீரோக்கள் -12, 10) அடுக்குப் பெட்டகங்கள் - 219, 11) தேநீர் மேசை -1, 12) தொலைக்காட்சிப் பெட்டி - 1, 13) சமையலறை அமாரித் தொகுப்பு - 1, 14)அளைத்து உபகரணங்களுடன் கூடிய டீசல் மின்உற்பத்தி இயந்திரம்-2, 15)குளிர்சாதனப் பெட்டி -1, 16) பூஜை மேசை - 1, 17) சோபா -7, 18) குளிர்பதனப் பெட்டி -1, 19) சமையல் பொருட்கள் - 5, 20) இருப்புக் கட்டில்கள் - 3, 21) ஏணிகள் - 3, 22) பேருந்துகள் - 12, 23) கார்கள் - 4, 24)வேன் - 1, 25) தடையில்லா மின்சார வழங்கும் கருவி-1, 26)பரத்தினாலான சேமிப்பு அமாரிகள் - 2, 27) பணிமனை வெல்டிங் கருவித் தொகுப்பு -4, 28) ஒகெலெக்ஸும் இயந்திரம் - 1, 29) கணினிகள் - 78, 30) ஜெனித் கணினித் திரைகள் - 33, 31) பரத்தினாலான அறைத் தடுப்புத் தொகுப்புகள் - 18, 32) மின்சாரப் பொருட்கள் - 1.

சொத்துக்கள் அமைந்துள்ள இடம்: ஸ்ரீவா கிரிஸ்டியன் சாரிட்டிபிள் டிரஸ்ட் (கிங் கல்வி நிறுவன வளாகம்), நல்லூர், நாமக்கல் மாவட்டம்.

அசையும் சொத்துக்களின் விரிவான விவரங்களுக்கு, விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை RFL நிறுவனத்தின் இணையதளமான **https://uat-religarefinvests.webflow.io/auction-notices** இல் பார்வையிடவும்.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 1,37,78,925/-
(ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஏழு லட்சத்து எழுபத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்)

டேவணித்தொகை (EMD): ₹ 13,77,893/-
(ரூபாய் பதிமூன்று லட்சத்து எழுபத்து ஏழாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்)

ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலதாரர்(கள்) / வாங்குபவர்(கள்), குறைந்தபட்ச கேட்பு விலையின் 10% தொகையை டேவணித் தொகையாக (EMD) செலுத்த வேண்டும். மேற்படி தொகையானது "Religare Finvest Limited" என்ற பெயரில் வரையப்பட்ட வங்கி வரைவோலை (DD) / பே ஆர்டர் (PO) மூலம், ஏலம் கோரிக்கைப் படிவத்துடன் (Bid) இணைத்து, RFL நிறுவனத்தின் கிளை அலுவலகமான **2வது தளம், "Aurum" கட்டிடம், எண்.9 கண்ணுசாமி ரோடு, RS புரம், கோயம்புத்தூர்-641002** கீழ்க்கண்ட முகவரியில் 17.12.2026 அன்று மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வெற்றிகரமான ஏலதாரர் / வாங்குபவர், விற்பனைத் தொகையில் குறைந்தபட்சம் 25% தொகையை (ஏலக் கோரிக்கையுடன் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள டேவணித் தொகை உட்பட), விற்பனை உறுதி செய்யப்பட்ட அதே நாளிலோ அல்லது அதற்கு அடுத்த வேலை நாளிலோ செலுத்த வேண்டும். மீதமுள்ள விற்பனைத் தொகையானது, விற்பனை உறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

இ-ஏல தேதி & நேரம் : 18.12.2026
காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை
Portal of E-Auction: https://www.bankeauctions.com/

பொதுமக்கள் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் கவனத்திற்கு: ஏதேனும் காரணத்தினால் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் நடைபெறாமல் போனால், எடுபெற்று கடன் வழங்கியவர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி தனது விருப்பத்தின் பேரில், தனியார் ஒப்பந்தம் (Private Treaty) மூலமாக சொத்தை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கலாம்.

விற்பனையின் பிற விபரங்கள்:

1. விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடலாம்: **https://uat-religarefinvests.webflow.io/auction-notices**
2. இ-ஏலம் பற்றிய விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர் **M/s. C1 India Pvt. Ltd, Mr. தரணி கிருஷ்ணா – Tel. No.: +91 72919 71124,25,26** மற்றும் **Mobile +91-99481 82222; email id – andhra@c1india.com.**
3. விருப்பமுள்ள நபர்கள் விண்ணப்பம் / ஏலம் சமர்ப்பிக்கும் விபரங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி **Mr.K.N.பரமேஷ், Mob: 89396 05467** மற்றும் **Mr.R.மனோஜ்குமார், Mob: 99404 46070**

தேதி : 10.11.2026
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
M/s.ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட்

இந்தியன் வங்கி Indian Bank
அலகாபாத் ALLAHABAD

பென்னாகரம் கிளை,
BDO அலுவலகம் அருகில், பென்னாகரம் – 636 810
தர்மபுரி மாவட்டம் அலைபேசி எண். 9442247170

பிற்சேர்க்கை–IV–A [விதி 8(6)–க்கான விதிமுறைகளைப் பார்க்கவும்]
அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைச்சொத்து பாதுகாப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 – உடன் படிக்க – பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் 8(6) ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்ட / கடன் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்த இந்தியன் வங்கி, பென்னாகரம் கிளையின் அதிகாரப்பூர்வ அலுவலர் அவர்களால், கள சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையாச்சொத்துக்கள், ஜாமீன் பெற்று கடனளித்த இந்தியன் வங்கி, பென்னாகரம் கிளைக்கு, திரு. **N நாகராஜன், திரு. M நஞ்சப்பன், திருமதி. N பாப்பம்மாள்** மற்றும் **திரு. N பன்னீர் செல்வம்** ஆகியோருக்கு சொந்தமாக உள்ள சொத்து.

இதன் எல்லைகளாவன பின்வருமாறு –
கிழக்கு – நஞ்சப்பன் இடம்,
தெற்கு – மது இடம்,
வடக்கு – கெம்புவீரன் இடம்,
மேற்கு – நஞ்சு இடம்,
மொத்த பரப்பு 0.53 ஏக்கர் கொண்ட இடம் மற்றும் **RCC** கட்டிடம்.

சொத்து மீதான வில்லங்கங்கள்	இந்தியன் வங்கி, பென்னாகரம் கிளைக்கு தற்போதுள்ள வில்லங்கம்
அடிப்படை விலை	**ரூ. 41,30,000/–** (ரூபாய். நாற்பத்து ஒரு இலட்சத்து முப்தாயிரம் மட்டும்)
டேவணித்தொகை	**ரூ. 4,13,000/–** (ரூபாய் நான்கு இலட்சத்து பதிமூன்றாயிரம் மட்டும்)
ஏல அதிகரிப்பு தொகை	**ரூ. 50,000/–**
மின்னணு ஏல தேதி மற்றும் நேரம்	**18.12.2026 காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை**
சொத்து அடையாள (ID) எண்	**IDIB6169709170**

ஏலதாரர்கள், ஆன்லைன் விலைகோரலில் பங்கேற்க, எமது மின்னணு ஏல சேவைதாரர் **PSB alliance Pvt Ltd** – ன் வலைதளம் (**https://baanknet.com**) யை பார்வையிட அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப ரீதியான உதவிக்கு உதவி மைய எண். 8291220220 யை அழைக்கவும். பதிவு நிலையையும், டேவணித்தொகை நிலையையும் அறிந்து கொள்ள மின்னஞ்சல் முகவரி : **support.baanknet@psballiance.com** யை தயவு கூர்ந்து தொடர்பு கொள்ளவும்.

சொத்து விபரங்களுக்கும், சொத்தின் புகைப்படத்துக்கும் வலைதளம் **https://baanknet.com** யை தயவு கூர்ந்து பார்வையிடவும்., மேலும் இந்த தளம் தொடர்பான விசாரணைக்கு தயவு கூர்ந்து **PSB Alliance Pvt Ltd** – யை தொடர்பு எண். 8291220220 ல் தொடர்பு கொள்ளவும்.

ஏலதாரர்கள், சொத்தை வலைதளம் **https://baanknet.com** ல் தேடும் போது இதன் மேற்குறிப்பிட்டுள்ள சொத்து அடையாள எண்ணை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேதி : 11.11.2026
இடம் : பென்னாகரம் அதிகாரப்பூர்வ அலுவலர்

தொடர்பு நபர்கள் – 1. அதிகாரப்பூர்வ அலுவலர் : திரு ராம் ஜி : 9442247170)

JM Financial

J.M. ஃபைனான்ஸியல் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிட்டெட்
பெருநிறுவன அடையாள எண் : **U67190MH2007PLC174287**
பதிவு அலுவலகம் : 7 வது தளம், சினர்ஜி, அப்பா சாஹேப் மராத்தே மார்க்,
ப்ரபாதேவி, மும்பை – 400 025 வலைதளம் : **www.jmfinancialarc.com**
தொடர்பு நபர் : 1). பிரமல் ஃபைனான்ஸ் லிமிட்டெட் – 022 69482444, 2). சிந்துஜா பிள்ளை – 022 6224 1676

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு – புதிய விற்பனை

பிரமல் கேப்பிட்டல் & ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட் (**"PFL"**) – ஆனது 2023 மார்ச் 29 தேதிய பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் படி, பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ("சர்சாபசி சட்டம்") ன் பிரிவு 5(1)**(b)** கீழ், பல்வேறு கடன் கணக்குகளை (இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன் கணக்குகள் உட்பட) **JMFARC – Aranya – Trust** ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் **JMFARC (JM)** (இனிமேற்கொண்டு "பணி ஒப்படைவு பெற்றவர்" என்றே அழைக்கப்படும்) க்கு பணி ஒப்படைவு செய்துள்ளது. **PFL** ஆனது பணி ஒப்படைவு / சேவை ஒப்பந்தம் மூலம் அனைத்து செயல்பாடுகள் மற்றும் செயல்முறைகளுக்கும் உதவுக் பொருட்டு, சேவைதாரராக / வகுல் முகமையாக செயல்பட அங்கீகரிக்கப்பட்டு, பணியமர்த்தப்பட்டுள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்/களிடமிருந்து நிலுவைத்தொகைகளை வகுலிக்கும் பொருட்டு, இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள ஜாமீன் சொத்துக்கள், அதிகாரப்பூர்வ அலுவலரால் சர்சாபசி சட்டம் 2002 ன் கீழ், சுவாதீனம் எடுக்கப்பட்டதை தொடர்ந்து, இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபரால், இயற்சுவாதீனம் பெறப்பட்டுள்ள இதன் கீழ் விவரிக்கப்பட்ட சொத்தை **"இருக்கின்ற இடத்தில்"** **"இருக்கின்ற நிலையில்"** மற்றும் **"இருக்கின்றவற்றுடன்"** என்ற அடிப்படையில் வாங்குவதற்கான விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன., இதன் விபரங்களாவன கீழ்க்கண்டவாறு –

கடன் குறிமிட்டெண் / கடன்தாரர்(கள்) / கூட்டு–கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை (ரூபாயில்)	அசையாச் சொத்து விபரம் _ இறுதி	அடிப்படை விலை	டேவணித்தொகை (அடிப்படை விலையில் 10%**RP**)	நிலுவைத்தொகை (04.11.2026 ம் தேதியின் படி) (ரூபாயில்)
(கடன் குறிமிட்டெண். 11800000973 / ஒகூர் (கிளை) ப்ரகாஷ் **R** (கடன்தாரர்) ராஜன் **R S** – (கூட்டு கடன்தாரர் 1)	தேதி : 20.07.2021 ரூ. 15,20,456/– ரூபாய். பதினைந்து இலட்சத்து இருபதாயிரத்து நாலுறாறு ஐம்பத்து ஆறு மட்டும்)	தமிழ்நாடு – 635 109, தர்மபுரி, க்ளாஸ்திபாம் கிராமம், சர்வே எண். 66/3, 66/4 ல் அமையப்பெற்ற மகாலட்சுமி நகரில் உள்ள பளாட் எண். 63**A**, 64 & 65 என்ற சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும்.	ரூ. 69,70,050/– (ரூபாய். அறுபத்து ஒன்பது இலட்சத்து எழுபதாயிரத்து ஐம்பது மட்டும்)	ரூ. 6,97,005/– (ரூபாய். ஆறு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து ஐந்து மட்டும்)	ரூ. 27,13,783/– (ரூபாய். ஒரு இருபத்து ஏழு இலட்சத்து பதிமூன்று ராயிரத்து எழுனூற்று எண்பத்து மூன்று மட்டும்)
(கடன் குறிமிட்டெண். 11800002297 / ஒகூர் (கிளை) ராபின்சன் **J** ஷேன் (கடன்தாரர்) ரவி **S** தோமப் (கூட்டு கடன்தாரர் 1)	தேதி : 26.09.2019 ரூ. 13,91,201/– ரூபாய். பதிமூன்று இலட்சத்து தொண்ணூற்று ஒராயிரத்து இருநூற்று ஒன்று மட்டும்)	தமிழ்நாடு – 635 114, தர்மபுரி, கெம்படிஹ, சாய் என்ஜினீரிங் கல்லூரி பின்புறம், சர்வே எண். 802/1 & 2 ல் அமையப்பெற்ற **Nbr** கார்டன் **Rv** ல் அமையப்பெற்ற சைட் எண். 3 ல் உள்ள சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும்.	ரூ. 16,20,000/– (ரூபாய். பதினாறு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்)	ரூ. 1,62,000/– (ரூபாய். ஒரு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்)	ரூ. 36,36,591/– (ரூபாய். முப்பத்து ஆறு இலட்சத்து முப்பத்து ஆராயிரத்து ஐனூற்று தொண்ணூற்று ஒன்று மட்டும்)

மின்னணு ஏல தேதி : 15.12.2026 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை (ஒவ்வொரு முறையும் எண்ணிலடங்கா 5 நிமிட நேர நீட்டிப்புடன்) விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி : 14.12.2026 மாலை 04.00 மணிக்கு முன்பு

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வலைதளம் **https://www.jmfinancialarc.com/Home/Assetforsale** அல்லது **https://www.bankeauction.in** ல் கொடுக்கப்பட்டுள்ள தொடர்பை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரருக்கு சர்சாபசி சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சட்டபூர்வமான 30 நாட்கள் கெடு அறிவிப்பு

பிரிவு 13(2) ன் கீழான அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகை முழுவதையும் ஏல தேதிக்கு முன்பு வரை சேர்த்து வரும் வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டுமெனவும்., தவறும் பட்சத்தில், சொத்து ஏலம் விடப்பட்டு / இலப்பனை செய்யப்படுவதோடு, மீதி நிலுவை ஏதேனும் இருப்பின் அது வட